**18.06.2026**

**MCOP.No.64/2024**
**ம.சா.1 : சாரதா**
**<u>1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து தேதியில் எங்கிருந்து எங்கு சென்றேன் என்றால் ராசிபுரம் பிரிவு ரோட்டில் கூலி வேலை முடித்து வீட்டிற்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாலையில் இடது பக்கம் நடந்து செல்லும் போது விபத்து ஏற்பட்டது. நான் சாலையில் நடந்து போகும் போது எதிர்மனுதாரர் சரியான திசையில் தான் ஓட்டி வந்தார் என்றும் நான் தான் திடீரென்று சாலையை எதிர் திசையில் கடந்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் சாலையில் செல்லும்போது கையில் சாப்பாடு மற்றும் துணி பை எதுவும் எடுத்து செல்லவில்லை. ராசிபுரம் பிரிவு ரோட்டில் இருந்து ஆலமரம் பஸ் நிறுத்தத்திற்கு சுமார் 1/2 பர்லாங்கு தூரம் இருக்கும். நான் சாலையில் நடந்து செல்லும் போது தீடிரென்று சாலையின் குறுக்கே நடந்து விட்டதால் தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல.

2) மேற்படி விபத்து நடைபெற்றபோது நான் நடு ரோட்டில் தான் கடந்தேன் என்றால் சரியல்ல. நான் ரோட்டின் ஓரமாக தார் ரோட்டில் தான் நடந்து வந்தேன் என்றால் சரியல்ல. மண் ரோட்டில் தான் நடந்து சென்றேன். நான் ரூ.15000 சம்பாதிக்கிறேன் என்று என் மனுவில் சொல்லி உள்ள தவறு என்றால் சரியல்ல. எனக்கு ஒரு நாளைக்கு ரூ.500 அல்லது 1000 கூலி கிடைக்கும். நான் தினமும் வேலைக்கு செல்வேன். அதிக இழப்பீடு கோருவதற்காக நான் வருமானத்தை மிகைப்படுத்தி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

3) மேற்படி விபத்திற்கும் எதிர்மனுதாரருக்கும் சம்மந்தம் இல்லை என்றும் நான் தான் விபத்திற்கு முழு காரணம் என்றால் சரியல்ல. நான் ரோட்டில் தடுமாறி விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. வண்டி வாகனத்தை யார் ஓட்டி சென்றார் என்றால் 2ம் எதிர்மனுதாரர் தான் ஓட்டி சென்றார். இந்த 2ம் எதிர்மனுதாரருக்கும் மேற்படி விபத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும்

சரியல்ல. இந்த விபத்திற்கு கவனக்குறைவு அஜாக்கிரதை என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனவே 1,2 எதிர்மனுதாரர்கள் இந்த விபத்தை குறித்து எவ்வித நஷ்டஈடும் வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கோரி உள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.06.18 17:43:23 +0530

**Accidents Claim Tribunal, Attur.**